# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:31** **தேதி:18.03.2015**

## கையெழுத்து இயக்கமும் மற்றும் சில மத்திய சங்க செய்திகளும்

அன்பார்ந்த தோழர்களே !

**கையெழுத்து இயக்கத்தினை முழுமைப்படுத்திடுக:-** BSNLன் புத்தாக்கத்திற்காக மக்களின் ஆதரவை திரட்டும் வகையில் பொது மக்கள் மத்தியில் இருந்து ஒரு கோடி கையெழுத்துக்களை பெறுவது என அகில இந்திய FORUM முடிவு செய்துள்ளது. 25.02.2015 அன்று நடைபெற்ற பாராளுமன்றம் நோக்கிய பேரணியின் போது நம்மால் 25 லட்சம் கையெழுத்துக்களை மட்டுமே வழங்க முடிந்தது. ஒரு கோடி என்ற இலக்கை அடைவதற்கான கடைசி தேதி 31.03.2015 என நீட்டிக்கப்பட்டுள்ளது. 11.03.2015 அன்று கோவையில் நடைபெற்ற மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் நமது தமிழகத்தில் மேலும் ஆறு லட்சத்திற்கும் மேற்பட்ட கையெழுத்துக்களை பெறுவது என திட்டமிட்டு மாவட்டங்களுக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு சுற்றறிக்கை எண் 29ல் வெளியிட்டுள்ளோம். அதற்கான பணிகளில் மாவட்ட சங்கங்கள் இறங்கியிருந்தாலும், நாம் முடிவெடுத்தபடி 25.03.2015க்குள் முடிப்பதற்கான வேகம் காணப்படவில்லை. எனவே மாநில சங்க நிர்வாகிகளும், மாவட்ட செயலர்களும் இன்னமும் கூடுதல் கவனம் செலுத்தி குறிப்பிட்ட தேதிக்குள் நமது இலக்கினை நிறைவு செய்ய வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

**TSMகளுக்கு ஜனாதிபத்திய உத்தரவு(PRESIDENTIAL ORDERS):** 01.10.2000 மற்றும் அதற்கு பின்னர் நிரந்தரப் படுத்தப்பட்ட அனைத்து TSMகளுக்கும் ஜனாதிபத்திய உத்தரவு வழங்கப்பட வேண்டும். மாவட்ட/மாநில அலுவலகங்கள் கார்ப்பரேட் அலுவலகங்களுக்கு அனுப்பாத காரணத்தால், இன்னமும் பலருக்கு அது வழங்கப்பட வில்லை. நிலுவையில் உள்ள அனைத்தையும் 31.03.2015க்குள் அனுப்ப வேண்டும் என கார்ப்பரேட் அலுவலகம் இறுதி கெடு விதித்துள்ளது. அதற்கு பின் ஏதாவது நிலுவையில் இருந்தது என்றால் மாவட்ட தலைமையின் மேல் பொறுப்பு சுமத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. **தமது மாவட்டத்தில் ஏதாவது நிலுவையில் உள்ளதா என பரிசோதித்து மாவட்ட செயலாளர்கள், மாநில சங்கத்திற்கு தகவல்களை உடனடியாக தர வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.**

**BSNLன் அடுத்த தலைமுறை வலைத்தளம் அறிமுகம்:-** தரைவழி தொலைபேசியில் அடுத்த தலைமுறை வலைத்தளத்தை(NEXT GENERATION NETWORK) மத்திய தொலை தொடர்பு அமைச்சர் திரு ரவிசங்கர் பிரசாத் 14.03.2015 அன்று அறிமுகம் செய்து வைத்துள்ளார். இந்த சேவையின் மூலம் தரைவழி தொலைபேசி(LAND LINE)யின் மூலமாக வீடியோ அழைப்புகள், மல்டி மீடியா மாநாடுகள்(CONFERENCING) தரைவழி மற்றும் மொபைல் தொலைபேசிகளுக்குள் அழைப்புகளை மாற்றுவது உள்ளிட்ட சேவைகள் கிடைக்கும். தற்போது பெங்களூருவில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள இந்த சேவை

விரைவில் கர்நாடக மாநிலம் முழுவதும் விரிவு படுத்தப்பட உள்ளது. 1000 கோடி ரூபாய் செலவு பிடிக்கும் இந்த திட்டத்தை நாட்டிலுள்ள 14 மில்லியன் தொலைபேசிகளுக்கு 2017 டிசம்பர் மாதத்திற்குள் வழங்க BSNL திட்டமிட்டுள்ளது.

**SSAக்களை வியாபார பகுதி(BUISNESS AREA)களாக மாற்றுவது:-** BSNL நிர்வாகம் தற்போது SSAக்களை வியாபார பகுதிகளாக ஒருங்கிணைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. இது செயல்பாட்டு திறனை அதிகரிப்பதற்காக செய்யப்படுகிறது என்று சொல்லப்பட்டது. SSAக்களை வியாபார பகுதிகளாக ஒருங்கிணைப்பதால் ஊழியர்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதே நமது சங்கத்தின் நிலை. இதனால் ஊழியர்களுக்கு எந்த ஒரு பாதிப்பும் இருக்காது என CMD, நமது மத்திய சங்க தலைவர்களிடம் 11.03.2015 அன்று தெரிவித்தார். 12.03.2015 அன்று GM(RESTG) திருமதி மது அரோரா அவர்களையும் நமது தலைவர்கள் சந்தித்து விவாதித்தனர். இந்த இரண்டு கூட்டங்களிலும் தற்போதுள்ள SSAக்கள் தொடரும் என்றும் அவை பெரிய SSAக்களுடன் இணைக்கப்பட மாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டது. எனினும் 11.02.2015 அன்று கார்ப்பரேட் அலுவலகம் வெளியிட்டுள்ள உத்தரவு எண்:4-2/2014-Restg (Vol.VIII)ல் மனித வள பிரச்சனைகள் அனைத்தும் வியாபார பகுதிகளில் கையாளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இது தொடர்பான ஒரு விரிவான, தெளிவான விளக்கத்தை அளிக்க வேண்டும் என நமது மத்திய சங்கம் கார்ப்பரேட் அலுவலகத்திற்கு ஒரு கடிதம் எழுதியுள்ளது.

**ப்ராட் பேண்ட் சேவையில் BSNL இரண்டாமிடம்:-** இது வரை BSNLதான் ப்ராட் பேண்ட் சேவையில் முதலிடத்தில் இருந்துள்ளது. ஆனால் சமீபத்தில் TRAI வெளியிட்டுள்ள அறிக்கையின் படி BSNL இரண்டாம் இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. பல்வேறு தொலை தொடர்பு நிறுவனங்களின் ப்ராட் பேண்ட் சேவையின் சந்தை பங்கீடு:-

| | |
|---|---|
| AIRTEL | 21.48% |
| BSNL | 20.18% |
| VODOFONE | 18.91% |
| IDEA | 14.94% |
| RELIANCE | 7.9% |
| OTHERS | 16.59% |

**சங்க தலைமையகத்தில் தங்குவதற்கான விண்ணப்பங்கள்:-** நமது அகில இந்திய சங்க கட்டிடமான கே.ஜி.போஸ் பவனில் தோழர்கள் தங்குவதற்கான விண்ணப்பங்கள் அனைத்தும் இதற்கு மேல் மாவட்ட செயலர்கள் மூலமாக அனுப்பப்பட வேண்டும். மாவட்ட செயலர்கள் தங்களின் லெட்டப் பேடில் மாவட்ட செயலரின் தொலை பேசி எண், ஃபேக்ஸ் எண் மற்றும் ஈமெயில் முகவரி ஆகியவற்றுடன் அனுப்ப வேண்டும். மாவட்ட செயலாளர்கள் மூலமாக வராத விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என மத்திய சங்கம் தெரிவித்துள்ளது.

**தேசிய கவுன்சில் கூட்டம்:-** அடுத்த தேசிய கவுன்சில் கூட்டம் 13.04.2015 அன்று நடைபெறும் என கார்ப்பரேட் அலுவலகம் அறிவிப்பு கொடுத்துள்ளது. இது ஊழியர் தரப்பு உறுப்பினர்களிடம் கலந்தாலோசிக்காமல் தன்னிச்சையாக நிர்வாகம் அறிவித்துள்ளது. எனவே இந்த தேதியினை மாற்ற வேண்டும் என ஊழியர் தரப்பில் கேட்கப்பட்டுள்ளது.

**தொழிற்சங்க நிர்வாகிகளுக்கு IMMUNITY TRANSFER:-** அங்கீகரிப்பட்ட சங்கங்களின் நிர்வாகிகளுக்கு IMMUNITY FROM TRANSFER என்பது பல ஆண்டுகளாக இருந்து வரும் வழக்கம். இது ஒரு ஆண்டாக இருந்து வருகிறது. BSNLல் ஊழியர் சங்கங்களின் அங்கீகாரம் மூன்றாண்டுகளாக மாற்றப்பட்ட இந்த சூழலில் இதனை மூன்று ஆண்டுகள் என மாற்றம் செய்ய வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் கோரிக்கை வைத்திருந்தது. இதனை ஏற்று நிர்வாகம் 16.03.2015 அன்று அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களின் பொது செயலாளர்கள், உதவி பொது செயலாளர்கள் மற்றும் பொருளாளர்களுக்கு மூன்று ஆண்டுகள் இந்த வசதியை கொடுக்க உத்தரவிட்டுள்ளது. ஆனால் இது ஒரு முறை மட்டுமே வழங்கப்படும், மறு முறை வழங்கப்பட மாட்டாது என அந்த கடித்ததில் கூறப்பட்டுள்ளது. நமது BSNL ஊழியர் சங்கம் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை. நமது பொதுசெயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்களும், துணை பொது செயலாளர் தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி அவர்களும், Sr.GM(SR) திரு ஷமீம் அக்தர் அவர்களை 17.03.2015 அன்று சந்தித்து இந்தக் கட்டுப்பாட்டை நீக்க வேண்டும் என கேட்டுக் கொண்டனர். அவரும் பரிசீலிக்க ஏற்றுக் கொண்டுள்ளார்.

**அதிகாரிகளுடன் சந்திப்பு:-** நமது BSNL ஊழியர் சங்கத்தின் பொதுசெயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்களும், துணை பொது செயலாளர் தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி அவர்களும் 17.03.2015 அன்று திருமதி சுஜாதா ரே அவர்களை சந்தித்து அடுத்த DIRECTOR(HR) ஆக தேர்வு செய்யப்பட்டதற்கு வாழ்த்துக்களை தெரிவித்தனர். ஊழியர்களின் பிரச்சனைகள் தொடர்பான ஒரு விரிவான விளக்கத்தை அவரிடம் நமது தலைவர்கள் கொடுத்து சுமூகமான தீர்விற்கு அவரின் ஒத்துழைப்பை கேட்டுள்ளனர். அடுத்த DIRECTOR (ENTERPRISES BUISNESS)ஆக தேர்வு செய்யப்பட்டுள்ள திரு N.K.மேத்தா ED (IT & CORPORATE AFFAIRS) அவர்களை சந்தித்து வாழ்த்து தெரிவித்த தலைவர்கள், அவரிடம் நிறுவனத்தின் மனித வள திட்டம் தொடர்பான ஒரு விரிவான விவாதம் நடத்தினர். முன்னதாக 16.03.2015 அன்று நமது தலைவர்கள் திரு ராஜேஸ் குமார் GM(TELECOM FACTORIES) அவர்களை சந்தித்து மும்பை டெலிகாம் ஃபேக்டரியில் சிம் கார்ட் மற்றும் ட்ராப் வயர்கள் தயாரிப்பதை மீண்டும் உடனடியாக செயல்படுத்த வேண்டும் என கேட்டுக் கொண்டனர். சிம் கார்ட்கள் தயாரிப்பதற்கான சிப் மாட்யூல்கள் விரைவில் கிடைத்து விடும் என்று கூறிய GM (TELECOM FACTORIES) தர ஒப்புதல் கிடைத்தவுடன் தான் ட்ராப் வயர்களின் தயாரிப்பு துவங்கப்படும் என்றும் தெரிவித்தார். மேலும் டெலிகாம் ஃபேக்டரிகளின் புத்தாக்கம் செய்வது தொடர்பாக ஒரு நீண்ட விவாதத்தினை தலைவர்கள் அவரிடம் நடத்தியுள்ளனர்.

வாழ்த்துக்களுடன்,

**தோழமையுள்ள,**

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**